TNRM010017292024

மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிமன்றம்

**முன்னிலை: திரு.எஸ். குமரகுரு, பி.எல்.,**
விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,
இராமநாதபுரம்.

2024ம் ஆண்டு ஜூலை மாதம் 26-ம் நாள் வெள்ளிக்கிழமை
மோ.வா.வி.கோ.தீ.அசல் மனு எண்.79/2024
CNR No: TNRM01-001729-2024
****

1) பூரணம், வயது சுமார் 59/2024, க/பெ. லேட். ஆறுமுகம், கதவு எண் 2/82, புல்லந்தை கிராமம், மாயாகுளம், கீழக்கரை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

2) மணிவண்ணன், வயது சுமார் 41/2024, த/பெ. லேட். ஆறுமுகம், கதவு எண் 2/82, புல்லந்தை கிராமம், மாயாகுளம், கீழக்கரை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

3) புனிதமலர், வயது சுமார் 38/2024, த/பெ. லேட். ஆறுமுகம், க/பெ. கனி, கதவு எண் 2/82, புல்லந்தை கிராமம், மாயாகுளம், கீழக்கரை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

4) மலர்விழி, வயது சுமார் 32/2024, த/பெ. லேட். ஆறுமுகம், கதவு எண் 2/82, புல்லந்தை கிராமம், மாயாகுளம், கீழக்கரை வட்டம், இராமநாதபுரம் மாவட்டம்.

**..... மனுதாரர்**

**/எதிர்/**

முத்துப்பாண்டி, த/பெ. முருகானந்தம், கதவு எண் 1/1, லெட்சுமிபுரம் சத்திர தெரு, வெளிப்பட்டிணம் அஞ்சல், இராமநாதபுரம் மாவட்டம்.

**.... எதிர்மனுதாரர்**

இம்மனு மோட்டார் வாகன விபத்துச் சட்டம்-1994 பிரிவுகள் 140 மற்றும் 166ன் கீழ் இவ் வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது. இந்த மோட்டார் வாகன விபத்தில் இறந்தவர் ஆறுமுகம். அவரின் வாரிசுகளான 1 முதல் 4 மனுதாரர்கள் இழப்பீட்டுத் தொகையாக ரூ.20,00,000/-த்தை இழப்பீடாக எதிர்மனுதாரர் கொடுக்க உத்தரவிட்டும், மேற்படி இழப்பீட்டுத் தொகையை மனுதாக்கல் செய்த தேதியிலிருந்து நீதிமன்றத்தில் இழப்பீடு பணம் செலுத்தும் தேதி வரை 12%

வட்டியுடனும் இம்மனுவிற்கான வழக்கு செலவுத்தொகையை எதிர்மனுதார் கொடுக்கும்படிக்கும் உத்தரவு கோரி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர்கள் ரூ.20,00,000/- இழப்பீடாக கோரியுள்ளார். அதற்கு நீதிமன்றக் கட்டணமாக மோட்டார் வாகன இழப்பீடு தீர்ப்பாயம் 1989 ம் ஆண்டு விதி 24(1)ன் கீழ் ரூ.19,372.50/- செலுத்தப்படவேண்டும். ஆனால் மனுதாரரால் ரூ.372.50/- மட்டும் நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது. மீதமுள்ள தொகை ரூ.19,000/-க்கு U/s.24(3) M.V.Act ன்படி நீதிமன்ற கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்க வேண்டி 03.04.2024 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு இ.ம.எண்.1/2024 ஆக இந்நீதிமன்றத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

மனு தாக்கல் நாள்: 24.03.2024 & 25.03.2024

இம்மனுவானது 26.07.2024 அன்று விசாரணைக்காக வந்தபோது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.A. ராமலிங்கம் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதார்களை அழைத்தும் ஆஜரில்லாததால் ஒருதலைப்பட்சப் படுத்தப்பட்டார். மனுதாரர்கள் அழைக்கப்பட்டும் ஆஜரில்லாத நிலையில் இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்...

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

1. மனுதாரர்கள் அழைக்கப்பட்டும் ஆஜரில்லாததாலும் மனுதாரர்கள்தரப்பில் எவ்வித பிரதிநிதித்துவமும் செய்யப்படாததாலும் இம்மனு தவறுகைக்காக தள்ளுபடி செய்யப்படுகிறது

2. செலவுத் தொகை பற்றி உத்தரவு ஏதும் இல்லை.

TNRM010017292024

2024ம் ஆண்டு ஜூலை மாதம் 26ம் நாளான இன்று என்னால் கையெழுத்திடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் தீர்ப்பாணை உத்தரவு வழங்கப்படுகிறது.

**ஒப்பம்/ எஸ். குமரகுரு,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**இராமநாதபுரம்.**

**முதன்மை மாவட்ட நீதிமன்றம்,**

**இராமநாதபுரம்.**

**M.C.O.P.No.79/2024**

**தீர்ப்பாணை உத்தரவு**

**நாள்: 26.07.2024.**